2011 செப்டம்பர் 12] [திரு. ரா. சரத்குமார்]

உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று, ஓய்வு பெற்ற நீதிபதி அவர்களின் தலைமையில் விசாரணை செய்யப்படுமென்று சொன்னது மகிழ்ச்சியை அளிக்கிறது. சில சமயங்களில், சட்டமன்றத்திலே நான் பேசும்போதெல்லாம் மக்கள் அதைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீவிரமாக விசாரணை நடத்துவார்கள் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கும்பொழுது, விசாரணை கமிஷன் என்ன சொல்கிறதென்று கேட்டபிறகு எடுக்க வேண்டிய முடிவுகள்தான் சிறப்பாக இருக்குமென்ற கருத்தை இங்கே நான் பதிவு செய்ய ஆசைப்படுகின்றேன். இந்தச் சமயத்தில் இறந்த 6 பேரின் குடும்பங்களுக்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு, நன்றி கூறி, விடைபெறுகிறேன். (குறுக்கீடு)

3. தகவல் கோரல்

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இலவச வேட்டி, சேலை தயாரித்து அளிக்கத் தேவையான நூல் மற்றும் முன்பணம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்ன திரு. தமிழரசன்? சரி, சொல்லுங்கள்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கிய நிகழ்வினை தங்கள் வாயிலாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பார்வைக்குக் கொண்டு வந்து விளக்கமறிய விரும்புகிறேன்.*

நேற்றைய 'தினமணி' நாளிதழிலே ஒரு கட்டுரை வெளியிடப்பட்டிருக்கிறது. அந்தக் கட்டுரையிலே, கோவை மற்றும் திருப்பூர் பகுதிகளிலே 75,000–க்கும் மேற்பட்ட விசைத்தறி தொழிற்சாலைகள் இயங்க முடியாத அளவிற்கு தடுமாறி வருவதாகவும், அதன்விளைவாக 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையிழக்கிற அபாயம் ஏற்பட்டிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, கடந்த 2005 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்திலே, விசைத்தறி வளர வேண்டுமென்பதற்காக, பல்லடம், குமாரபாளையம், ஆண்டிப்பட்டி ஆகிய மூன்று பகுதிகளிலே இந்தியாவிற்கே ஒரு முன்னுதாரணமாக 'விசைத்தறிப் பூங்காக்களை' ஏற்படுத்தி, அதை வளப்படுத்தியவர் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2011 செப்டம்பர் 12 முற்பகல் 10–45

இன்றைக்கு பல்லடம், குமாரபாளையம் பகுதிகள் விசைத்தறிப் பூங்காக்கள் இயங்கிக் கொண்டிருக்கின்ற பகுதிகளாக இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய தொகுதி என்பதால், கடந்த தி.மு.க. ஆட்சியிலே ஆண்டிப்பட்டி பூங்கா சீரழிக்கப்பட்டது. ஆக, விசைத்தறி வளர வேண்டுமென்ற நோக்கிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 7 கோடி ரூபாய் அன்றைக்கு செலவழித்தார்கள். அந்த 7 கோடி ரூபாயையும் திருப்பித் தர வேண்டுமென்று கடந்த தி.மு.க. ஆட்சி அந்த விசைத்தறி அதிபர்களை அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தி நிர்பந்தப்படுத்தி, நெருக்கடிக்கு உள்ளாக்கி, இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் திரும்பப் பெற்றார்கள். இதுவெல்லாம் நடந்த கதை.

ஆனால், இன்றைக்கு இடைத்தரகர்கள் இல்லாமல், எந்தவிதமான ஆளுங்கட்சித் தலையீடும் இல்லாமல், விசைத்தறித் தொழிற்சாலைகள் இயங்க வேண்டுமென்று விழைகிற, விசைத்தறிகளுடைய விசையாகவும், திசையாகவும் இருக்கக்கூடிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தக் கட்டுரை குறித்த விளக்கத்தினை அளிக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக கைத்தறித் தொழில் கிராமப்புற மக்களுக்குப் பெருமளவில் வேலைவாய்ப்பினை வழங்கி வருகிறது. இத்தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் 4 இலட்சம் கைத்தறி நெசவாளர்களின் நலன் காத்திட எனது தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அதேபோன்று, விசைத்தறி நெசவாளர்களின் நலனுக்காகவும் பல்வேறு நடவடிக்கைகளை எனது அரசு எடுத்து வருகிறது. தமிழகத்தில் தற்பொழுது செயல்பட்டுவரும் ஐந்து கூட்டுறவு நூற்பாலைகள், கைத்தறி கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்குச் சிட்டா நூல் தொடர்ந்து வழங்க ஏதுவாகவும், கூட்டுறவு நூற்பாலைகள் தாங்கள் உற்பத்தி செய்யும் நூலை எளிதில் விற்பனை செய்யும் வகையிலும், சிட்டா நூல் உற்பத்திச் சட்டப்படி 40 விழுக்காடு நூல் சிட்டா நூலாகத் தயாரிக்கப்பட வேண்டுமென்று இருந்தாலும்,

2011 செப்டம்பர் 12] [செல்வி ஜெ ஜெயலலிதா]

அதற்கு அதிகமான அளவில் சிட்டா நூல் உற்பத்தி செய்து வருகின்றன. மேலும், இந்நூற்பாலைகள் தொடர்ந்து செயல்படத் தேவையான காசுக் கடன் வசதி மற்றும் நடைமுறை மூலதனம் ஆகியவை கிடைத்திடும் வகையிலான நடவடிக்கைகளை எனது அரசு எடுத்து வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்யும் துணி ரகங்களைக் கொள்முதல் செய்து நாடெங்கிலுமுள்ள துணி விற்பனை நிலையங்கள்மூலம் விற்பனை செய்வதோடு, அரசுத் திட்டங்களான இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம்; இலவச சீருடை வழங்கும் திட்டம் மற்றும் முதியோர் ஓய்வூதியம் பெறுவோருக்கு இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்தும் முகமை நிறுவனமாக கோ–ஆப்டெக்ஸ் செயல்பட்டு வருகிறது.

கைத்தறி நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கும் வகையிலும்; கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் வாழும் ஏழை எளிய மக்கள் பொங்கல் பண்டிகையின்போது இலவசமாக வேட்டி சேலை பெற்றிடும் வகையிலும்; இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம் பல ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்குத் தேவையான வேட்டி சேலைகள் அனைத்தும், மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. வேட்டி சேலைகளை உற்பத்திச் செய்யத் தேவையான பருத்தி பாவு நூல், கூட்டுறவு நூற்பாலைகளில் இருந்தும்; கூட்டுறவு நூற்பாலைகளால் தயாரித்து அளிக்க முடியாத பாவு நூல் மற்றும் பாலியஸ்டர் ஊடை நூல் ஆகியவை வெளிச் சந்தையிலும் கொள்முதல் செய்யப்பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுகின்றன. வெளிச் சந்தையில் இவ்வாறு பாவு நூல் மற்றும் பாலியஸ்டர் நூல் கொள்முதல் செய்ய கைத்தறி மற்றும் துணி நூல் ஆணையரைத் தலைவராகக் கொண்டு ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கும் குழு அரசால் நியமனம் செய்யப்படுகிறது. இக்குழுவிற்கு கோ–ஆப்டெக்ஸின் தனி அலுவலர்/மேலாண்மை இயக்குநர் அமைப்பாளராக, Convener ஆக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், கோ–ஆப்டெக்ஸின் புதிய நிபந்தனைகளால் "ஐந்து இலட்சம் நெசவாளர்கள் வேலை இழக்கும் அபாயம்" என சில பத்திரிகைகளில் செய்தி வெளியாகியுள்ளது. இச்செய்தியானது, கோ–ஆப்டெக்ஸின் தனி அலுவலர்/மேலாண்மை இயக்குநரின்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 செப்டம்பர் 12

20–7–2011 நாளிட்ட சுற்றறிக்கையில், விசைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இலவச வேட்டி சேலை உற்பத்திக்குத் தேவையான நூலையோ அல்லது கூலியையோ முன்பணமாக வழங்க முடியாது எனவும்; அவ்வாறு தேவையெனில், சங்கங்கள் வங்கியிடமிருந்து உத்தரவாதம் பெற்று சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவித்ததனால், நெசவாளர்கள் மத்தியில் ஏற்பட்ட அதிருப்தியின் அடிப்படையில் வெளியாகியுள்ளது.

2012 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையின்போது வழங்கப்படும் இலவச வேட்டி சேலைத் திட்டத்திற்குத் தேவையான வேட்டி சேலைகள் தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் உற்பத்தித் திறனைக் கணக்கில் கொண்டு உற்பத்தித் திட்டம் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது.

முற்பகல் 10–50

இத்திட்டத்திற்கு கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து பெறப்படும் நூல் தவிர, கூடுதல் நூல் தேவைக்கான கொள்முதல் ஒப்பந்தப்புள்ளி 26–9–2011 அன்று திறக்கப்பட்டு, அக்டோபர் முதல் வாரத்தில் உற்பத்திக்குத் தேவையான நூல் நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டுவிடும்.

மேலும், இலவச வேட்டி சேலைகள் தயாரிக்கத் தேவையான நூலை உற்பத்தி செய்து வழங்க கூட்டுறவு நூற்பாலைகளுக்கும், வேட்டி சேலை தயாரித்து வழங்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேவைப்படும் முன்பணம், கோ–ஆப்டெக்ஸ்மூலம் முன்பணமாக விடுவிக்கப்படுகிறது. வேட்டி சேலைகள் தயாரித்து வழங்கப்பட்டபின், வழங்கப்பட்ட முன்பணம் ஈடு கட்டப்படும். விசைத்தறி மற்றும் கைத்தறிச் சங்கங்களுக்கு நடப்பு ஆண்டிற்குத் தேவைப்படும் 256 கோடி ரூபாயை முன்பணமாக கோ–ஆப்டெக்ஸ்மூலம் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 256 கோடி ரூபாய் உடனே விடுவிக்கப்படும். எனவே, ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள உற்பத்தித் திட்டத்தின் அடிப்படையில், விசைத்தறி நெசவாளர்கள் இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் உற்பத்தி செய்வதில் எந்தவித இடர்பாடும் ஏற்பட வழியில்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே no clarification, no debate. *(குறுக்கீடு)*